**கவனிக்க.-** 2017.02.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2009 - 2017 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2017.03.03**

*2009 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 402 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 403 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 408 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் ( கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் – 2017*

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2017.03.21 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | மாத்தறை | கம்புறுபிட்டிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், காலி. | கம்புறுப்பிட்டிய நகருக்கு அருகில் | 2017.04.01 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் – (இடத்தின் பெயர்)'' எனக் குறிப்பிட்டு 2017.03.21 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 05,*
*2017, பெப்புருவரி 09.*

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2017**

விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2017

*கட்டிட உரிமையாளர் விபரம் -*

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

*கட்டிடம் தொடர்பாக-*

1. எந்தப் பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம்.:----.
6. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும். :----.
7. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?----.
8. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?.----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் ( மதில்/கம்பி வேலி/-----.)
10. நிறுத்தி வைக்கக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

3-110

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றோம்:-

கம்பனியின் பெயர் : என்விரோடெச் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்ட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 118130
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.11.21
கம்பனிப் பதிவு முகவரி: இல.521, 1/1, நீர்கொழும்பு வீதி, பேலியகொடை

(பேராசிரியர் ) ஜே.எம்.டீ. ஆரியரத்ன
( சார்ரெட் எக்கவுன்டென்ட்),
கம்பனிச் செயலாளர்.

3-23

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் , பின்வரும் கூட்டிணைப்பு பற்றிய அறிவித்தல் வழங்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பீகொக் வில்லா மிரிஸ்ஸ ((பிறைவேட்) லிமிட்ட்
பதிவு அலுவலகம்: உளுவஜ்ஜகொடவத்த, உடுப்பில, மிரிஸ்ஸ
கூட்டிணைப்புத் திகதி: 2017, பெப்புருவரி 01
பதிவிலக்கம் : பீவீ 119780

கம்பனிச் செயலாளர்கள்.

3-25

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2016.01.20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : குளோபல் எக்றோ லங்கா ((பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம் : பீவீ 11152

முகவரி : இல. 14, பங்களாவத்தை, மாபோல, வத்தளை

கம்பனிச் செயலாளர்.

3-41

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2016.05.04 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : மெயின்ஸ் லங்கா குலோபல் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம் : பீவீ 113428

முகவரி : இல. A/F1/U19, சியசெத செவன, பன்சிகாவத்த வீதி, கொழும்பு 10

கம்பனிச் செயலாளர்.

3-42

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : யுனிக் இன்டஸ்ட்ரியல் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம் : பீவீ 116150

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.08.31

பதிவு முகவரி : இல. 1/467, காலி வீதி, களுத்துறை தெற்கு

கம்பனிச் செயலாளர்.

3- 56

## அறிவித்தல்

பிரண்டிக்ஸ் டெக்ஸ்டைல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் ( பீவீ 824) பிரண்டிக்ஸ் மாக்கரி ஏஷியா ( பிறைவேட் லிமிட்டட்) (பீவீ 74530) ஸ்டீவன்சன்ஸ் லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் ( பீவீ 6839) , பிரண்டிக்ஸ் டிசைன் சொலூசன்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் ( பீபி 792பீவீ) பிரண்டிக்ஸ் லைட்சோ லிமிட்டட் ( பிபி 88) மற்றும் பிரண்டிக்ஸ் ஹெங்கார்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் ( பீவீ 13002) குருவிட்ட டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிட்டட் ( பீகிவ் 176 பீவீ) உடன் கம்பனிகளைக் கூட்டிணைத்தல் .

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டவாக்கத்தின் 242(2) இற்கு அமைவாக மேலே குறிப்பிடப்பட்ட கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டு ஒரே நிறுவனமாக எதிர்காலத்தில் குருவிட்ட டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிட்டட் ( பீகிவ் 176 பீவீ) எனும் பெயரின் கீழ் இயங்கும் என மேற் குறிப்பிடப்பட்ட கம்பனிகள் பணிப்பாளர்கள் சபைகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டிணைக்கப்பட்ட இக் கம்பனிகள் 2017, மாச்சு 15 ஆந் திகதி அல்லது கம்பனிகளை பதிவு செய்யும் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பிரண்டிக்ஸ் டெக்ஸ்டைல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிட்டட் பிரண்டிக்ஸ் மாக்கரி ஏஷியா ( பிறைவேட்) லிமிட்டட் ஸ்டீவன்சன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் , பிரண்டிக்ஸ் டிசைன் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் , பிரண்டிக்ஸ் லைட்சோ லிமிட்டட் மற்றும் பிரண்டிக்ஸ் ஹெங்கார்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்

பிரண்டிக்ஸ் மெனேஜ்மன்ட்
சேர்விஸஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

3-70

## வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்பிரகாரம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பெல்லி லிவிங் ( (பிறைவேட்) லிமிட்டட்

கம்பனி இலக்கம் : பீவீ 119652

கூட்டிணைப்புத் திகதி: 2017, சனவரி 27

பதிவு அலுவலக முகவரி : இல. 18, கெமுனு மாவத்தை, போருபனபாதை, இரத்மலானை

பி. டபிள்யூ. கோப்பரேட் செக்கிரட்டேரியல்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3- 108

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : ஏ ஆர் எல் எலிவேட் ((பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இல : பீவீ 119753*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.01.31*
*பதிவு முகவரி : இல. 278, யூனியன் பிளேஸ், கொழும்பு 02*

பி. டபிள்யூ. கோப்பரேட் செக்கிரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 109*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கம்பனியாக்கப்பட்டுள்ளது.-*

*கம்பனியின் பெயர் : மருதி கன்ஸ்ட்ரக்சன் ((பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவீ 119808*
*பதிவுத் திகதி: 2017, பெப்புருவரி 2*
*பதிவு முகவரி : இல. 140/1, சீ ஸ்ரீட் , நீர்கொழும்பு*

கம்பனிச் செயலாளர்.

*3- 131*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : ஸ்கைகோக் இன்சிடிடியுட் ஒப் எரோனோடிகல் இன்ஜினியரிங் ((பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் இல. : பீவீ 119773*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017, பெப்புருவரி 2*
*பதிவு முகவரி : இல. 29, திம்பிரிகஸ்கட்டுவை, நீர்கொழும்பு*

டி.சி. வீரசிங்ஹ - சட்டத்தரணி,
கம்பனிச் செயலாளர்.

இல. 165, கிருல வீதி,
கொழும்பு 5.

*3- 139*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனியின் பெயர் 2017.02.13 ஆந் திகதி யிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் முன்னைய பெயர் : ஏசியா பெசிபிக் பிரேவரி (லங்கா) லிமிட்டட்*
*பதிவு இலக்கம் : பீபி 910*
*பதிவு முகவரி : இல. 260, கிறீன் ஹவுஸ், நாவல ரோட், நாவல*
*கம்பனியின் புதிய பெயர்: ஹைனெகென் லங்கா லிமிட்டட்*

சென்ட்ரல் கோப்பரேட் அன்ட் கன்சல்டன்சி சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

*3- 144*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர் :பொன்டஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவு இலக்கம் : பீ வீ 119971*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017, பெப்புருவரி மாதம் 08ஆந் திகதி*
*பதிவு அலுவலகம்: முதலாவது கோபுரம், இல. 31ஏ 1,320, யூனியன் பிளேஸ், கொழும்பு2.*

பணிப்பாளர்.

*3- 156*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் முன்னைய பெயர் : திரிசூல் அவுட்டோ எட்வடைசிங் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவு இலக்கம் : பீ வீ 64867*
*பதிவு முகவரி : இல. 10, அசல விளையாட்டு மைதானம் வீதி, ஒபேசேகர நகரம், ராஜகிரிய.*
*கம்பனியின் புதிய பெயர்: திரிசூல் இண்டகிரேடட் (பிறைவேட்) லிமிட்டட்*
*பெயர் மாற்றத் திகதி: 2017, சனவரி 16*

கம்பனிச் செயலாளர்கள்.

*3- 187*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் பிரகாரம், கீழ் வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : தரங்க மோடர் டிரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 119779
பதிவு முகவரி : இல. 26, மைல் போஸ்ட், கலல்பிட்டிய, நிட்டம்புவ
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.02.01

கம்பனி பணிப்பாளர்.

3- 188

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம், கீழ் வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப் படுகின்றது.-

கம்பனியின் பெயர் : த லெ ஒன் கெபே என்ட் ரெஸ்டூரண்ட் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல. : பீவீ 119826
பதிவு முகவரி : இல. 68/ஏ/8, கண்டி வீதி, வேவல்தெனிய
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.02.02

கம்பனி பணிப்பாளர்.

3- 189

## கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

2016, திசெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பங்குகளின் அதிகாரங்களுக்குட்பட்ட வகையில் "வரையறுக்கப்பட்ட கம்பனியிலிருந்து " "வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக " அதனது பதவிநிலையை மாற்றம் செய்யப்பட்டதின் முடிவாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) இன் பிரிவின் பிரகாரம் இவ்வறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.-

கம்பனியின் முன்னைய பெயர் : மெல்ஸ்ரகோப் லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பிவி 11755 பிபீ
பதிவு முகவரி : இல. 110, நொரிஸ் கெனல் பாதை, கொழும்பு 10
கம்பனியின் புதிய பெயர்: மெல்ஸ்ரகோப் பிஎல்சி

பி டபிள்யூ கோப்பரேட் செக்ரட்டேரியல் (பிவிரி) எல்ரிடி
கம்பனிச் செயலாளர்கள்.

3- 206

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 444/36, கிரீன் விலேஜ், அருக்கொடை, அலுபோமுல்ல என்ற முகவரியில் வசிக்கும் நிஹால் விதானகே ( தே.அ.அ.இல. 63100804 V) ஆகிய என்னால் இல. 444/ 36 கிரீன் விலேஜ், அருக்கொடை, அலுபோமுல்ல என்ற முகவரியில் வசிக்கும் தோன ரேணுகா பிரியதர்சனீ என்பவருக்கு வழங்கப்பட்டதும் தினப்புத்தக இலக்கம் 12359 ஐயும் உடைய 2007.11.23 ஆம் திகதி டபிள்யூ. டீ கருணாதிலக்க பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 884 என்ற இலக்கத்தையுடைய அற்றோணித்தத்துவமானது 2017.02.10 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதனை அனைவருக்கும் அறிவிக்கின்றேன்.

நிஹால் விதானகே.

3- 29

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

148/7, 4 ஆம் லேன் உயன லுனாவ, மொரட்டுவையில் வதியும் பால மண்டடிகே திலங்க லக்ஷான் பெர்னான்டோ தே.அ.அ. இலக்கம் 822022561V ஆகிய நான் , தெரிவித்துக்கொள்வதாவது, 148/7, 4ஆம் லேன் , உயன மொரட்டுவையில் வதியும் பால மண்டடிகே நிமல் பெர்ணான்டோ தே.அ.அ.இலக்கம் 582712450V என்பவர் எனது அற்றோணித் தத்துவதாரராக பிரசித்த நொத்தாரிசு அயோணி விமல்கா பெரேராவினால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 654 ஆம் இலக்கம் மற்றும் 2009.07.25 ஆம் திகதி வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2017.02.08 முதல் செயலிழக்கச் செய்யும் வகையில் இரத்துச் செய்யப்படுவதாகவும் அன்றைய தினத்திற்குப் பிறகு அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் என்னால் பொறுப்புக் கூறப்படமாட்டாது எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

திலங்க லக்ஷான் பெர்ணான்டோ.

3- 47

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.72, ஈடன் காடன்ஸ், சமகி மாவத்தை, ஹோகந்தர என்ற முகவரியில் வசிக்கும் அதிகாரம் ஜயசூரிய முதியான்சேலாகே சன்தன பண்டார (தே.அ.அ.இல. 833053434 V) என்பவரினால் இல. 42/3, கல்பொத்த வீதி, நாவல, ராஜகிரிய என்ற முகவரியில் வசிக்கும் தினேஷ் சஞ்சீவி மிசெல் ( தே.அ.அ.இல. 832800910V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான திரு. எப்.பி.ஜேசுதாசன் அவர்களினால் 2013.02.08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1097 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவமானது 2017.02.08 ஆம் திகதி முதல் செல்லுபடியாகும் விதத்தில் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்ற தென்பதை இலங்கைப் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக் கின்றேன்.

தினேஷ் சஞ்சீவி மிசெல்.

2017.02.08.

3- 54

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு,கொழும்பு 3, கொள்ளுப்பிட்டி, தர்மராஜ மாவத்தை, 9 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சிறிரஞ்சனி பூலோகசுந்தரம் ஆகிய நான், குறித்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி, எமர்சன் வீதியைச் சேர்ந்த விஸ்வநாதன் கதிரவேலு அவர்களுக்கு கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. சிதம்பரப்பிள்ளை அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதியிடப்பட்ட 329 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தை ( 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10ஆந் திகதி பதிவாளர் நாயக அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட) இத்தால் இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குவதோடு அது செயற்பாட்டில் இல்லை எனவும் இதன் பின் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் புரியும் செயல்கள் அல்லது ஆவணங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு நான் பொறுப் பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிரஞ்சனி பூலோகசுந்தரம்.

3- 103

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலரும் அறிவதாவது, ராகமை, ஹொரபே, கோவில் வீதி, இல. 49/2/1/A ஐச் சேர்ந்த மத்துகமகே டொன் ஜயதீச(தே.அ.அ.இல. 482561306V) ஆகிய நான், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எம்.ஏ.எஸ்.எல். மல்லவாராய்ச்சியினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டதும் இல. 21 ஐக் கொண்டதும் 2014, ஆடி மாதம் 21ஆந் திகதியிட்டதும் ராகமை, ஹொரப்பே, கோவில் வீதி, இல. 49/2/1/A ஐச் சேர்ந்த மத்துகமகே டொன் ருவானி இரோசனி மத்துகம என்பவருக்கு வழங்கிய அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

மேற்படி அற்றோணித்தத்துவத்தினால் அவர் செய்யும் எந்தக் கைமாற்றத்திற்கும் , நான் பொறுப்பேற்க மாட்டேன் என இத்தால் அறியத்தருகிறேன்.

மத்துகமகே டொன் ஜயதீச.

3- 119

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, கம்புருகமுவை, தல்அரம்ப, "விஜய" வில் வசிக்கும், பியதிகமகே ஜயவீர ஆகிய அற்றோணி அதிபதியான என்னால், 2007.10.01 ஆந் திகதி பிரசித்தி பெற்ற நொத்தாரிசுமான திரு. சிசிற ரங்கஜீவ கமகே என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 716 ஐக் கொண்ட அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம், இலக்கம் 149, ரூபன் பெரேரா வீதி, பொரலஸ்கமுவையில் வசிக்கும் பியதிகமகே ஜயசூரிய என்பவரை எனது அற்றோணி அதிகாரியாக நியமிக்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை வலுவிழக்கச் செய்து முடிவடைய செய்து இரத்துச் செய்ததாக இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

பியதிகமகே ஜயவீர.

3- 161

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இங்கு கீழ் கையொப்பமிடும், சபரகமுவ மாகாணத்தின் , இரத்தினபுரி மாவட்டத்தில், ரக்வானை, கந்த கும்புர, இல. 02 இல் வதியும் கருப்பன்னண் பாலகுமார் ஆகிய நான், வெளிநாடு செல்வதற்கு முன்னர் ரக்வாணை பிரசித்த நொத்தாரிசு திரு. பீ.ஆர்.பீ. அநுருத்த ஜயசேகர அவர்களினால் எழுதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட இல. 215 மற்றும் 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி கொண்ட அற்றோணித்தத்துவத்தினால், ரக்வாணை, பிரதான வீதி, இலக்கம் 66/1 ஐக் கொண்ட இடத்தில் வதியும் தேவேந்திர ராஜா சுகனியா ஆகிய நபருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இன்று தொடக்கம் வெளியிடப்பட்டு இரத்துச் செய்து வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இவ்வாறு அறியத்தருகின்றேன். அவரினால் எனது சார்பாக எடுக்கப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் இன்று தொடக்கம் நான் வகை கூறமாட்டேன் எனவும் அறிவித்துக்கொள்கிறேன்.

கருப்பன்னண் பாலகுமார்.

2017, சனவரி மாதம்25ஆந் திகதி.

3- 179

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கோதட்டுவ, போபத்தை, இல. 291/1 B இல் வதியும், இந்திக ராமநாயக்க ( தே.அ.அ.இல. 663184083V) ஆகிய என்னால் கோஷிபா நிதி பிறைவேட் லிமிட்டட்டுக்கு கம்பஹா பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.டபிள்யூ. உதய குமார அவர்களினால் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2016.11.18ஆந் திகதிய 311 ஆம் இலக்க அற்றோணித்தத்துவம் 2017.02.04 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டு வலுவற்றதாக்கப்பட்டுள்ளதெனவும் இதன் பின்னர் இவ் அற்றோணித்தத்துவதாரரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் யாவருக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

இந்திக ராமநாயக்க.

3-192

# ஏல விற்பனைகள்

**லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

**மிரிஸ்ஸ என்னுமிடத்தில் அமைந்துள்ள 1 றூட் 1.75 பேர்ச் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க காணி**

**தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை மிரிஸ்ஸ என்னுமிடத்தில் அமைந்துள்ள பொதஹென்னகே கொறட்டுவ அல்லது படிஞ்சி கெதரவத்த என்றழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என் விஜேவீர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1992.03.20 ஆந் திகதியிடப்பட்ட 4353 ஆம் இலக்க படத்தில் லொட் 1 என அடையாளமிடப்பட்டுள்ளது அதன் விஸ்தீரணம் 01 றூட் 1.75 பேர்ச். மற்றும் அதனகத்தேயுள்ள சகலதும்**

*விஜேவீர குணரத்ன முஹாவிதாரம்கே ஜயந்த என்பவர் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு அனுஷா நிரஞ்சல பெர்னாந்து அவர்கள் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2012, ஓகத்து 03 ஆந் திகதியிடப்பட்ட 1742 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் இவ்வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகைப் பணத்தைச் செலுத்தத் தவறியதால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய மேற் குறிப்பிட்ட ஆதனம் பகிரங்க ஏல விற்பனை மூலம் அதே இடத்தில் வைத்து 2017, மாச்சு 17 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு விற்பனை செய்யப்படும்.*

**மேலதிக விபரங்களுக்கு**.- *2016, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியையும், த அய்லன்ட் , திவயின மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**: *மாத்தறையிலிருந்து காலி வீதி ஊடாக மிரிஸ்ஸ சந்தி வரை செல்லவும் குறித்த ஆதனம் இடப்பக்கம் அமைந்துள்ளது.*

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- *உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகையை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% (ஒரு சதவீதம் மற்றும் பெறுமதி சேர் வரி) ;*
*(3) ஏலதாரரின் தரகும் பணம் 2.5% (இரண்டரை சதவீதம்);*
*(4) முழு விளம்பரச் செலவு;*
*(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 3,000 ரூபா;*
*(6) விற்பனை உறுதிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம் 7,500 ரூபா.*

*மிகுதி கொள்வனவு விலையின் 90% விற்பனை நடைபெற்று 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும் .*

*மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய : முகாமையாளர் ( கடன் மீளப்பெறுதல்) லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி லிமிட்டட், இல. 80, நாவல வீதி, நுகேகொடை.*

*தொலைபேசி இல.: 011-2821030 தொலைநகல்: 011-2821031.*

*பி.கே.ஈ.சேனாபதி,*
*நீதிமன்றஆணையாளர், மதிப்பீட்டாளர்,*
*பட்டய ஏலதாரர்.*

*134, பெத்தகான வீதி,*
*கோட்டே.*
*தொலைபேசி இல. : 2673656, 0777-672082*
*தொலைநகல்: 2781184.*

*3-67*

---

**லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

**இல.37A, பாணந்துறை வீதி இரத்தினபுரி என்னுமிடத்தில் அமைந்துள்ள 2 றூட் 35.75 பேர்ச் விஸ்தீரணமுள்ள பெறுமதிமிக்க காணி**

**சப்பிரகமுவ மாகாணம், குருவிட்ட கோறளை, உடபத்துவ தெற்கு வெல்லுபான பிரிவு இரத்தினபுரி மாநகர சபை எல்லையினுள் அமைந்துள்ள மதுரவெல மற்றும் மதுரவெல ஒவிட்ட என்றழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். வர்ணசூரிய அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2006,யூலை 21 ஆம் திகதியிடப்பட்ட 802 A1 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 என அடையாள மிடப்பட்ட காணித்துண்டு.**

*கடன்பட்ட அத்தநாயக்க மொஹட்டிலாகே லக்சிறி அத்தநாயக்க என்பவர் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எம்.பி.என்.செனவிரத்ன அவர்கள் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2006, ஒற்றோபர் 09 ஆந் திகதியிடப்பட்ட 224 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் இவ்வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகைப்பணத்தைச் செலுத்தத் தவறியதால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கமைய மேற் குறிப்பிட்ட ஆதனம் பகிரங்க ஏலம் மூலம் அதே இடத்தில் வைத்து 2017, மாச்சு 16 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.*

**மேலதிக விபரங்களுக்கு**.- *2017, சனவரி மாதம் 27 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியையும், த அய்லன்ட் , திவயின மற்றும் தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**: *இரத்தினபுரி மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கொழும்பு வீதி ஊடாக மொரகஹயட்ட சந்தி*

வரை ஏறத்தாழ 300 மீற்றர் தூரம் பயணிக்கவும், அங்கிருந்து இடது பக்கம் பாணந்துறை வீதி சென்று அதன் பின் 400 மீற்றர் தூரம்வரை 67 ஆம் கட்டை கி. மீ வரை செல்லும்போது குறித்த ஆதனத்தை இடது பக்கம் காணலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகையை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% (ஒரு சதவீதம் மற்றும் பெறுமதிசேர் வரி) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% (இரண்டரை சதவீதம்);
(4) முழு விளம்பரச் செலவு;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 3,000 ரூபா;
(6) விற்பனை உறுதிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம் 7,500 ரூபா.

மிகுதி கொள்வனவு விலையின் 90% விற்பனை நடைபெற்று 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும் .

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டியது : முகாமையாளர் ( கடன் மீளப்பெறுதல்) லங்கா புத்ர அபிவிருத்தி வங்கி லிமிட்டட், இல. 80, நாவல வீதி, நுகேகொடை.

தொலைபேசி இல. : 011-2821030 தொலைநகல்: 011- 2821031.

பி.கே.இ.சேனாபதி,
நீதிமன்றஆணையாளர், மதிப்பீட்டாளர்,
பட்டய ஏலதாரர்.

134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2673656, 0777- 672082
தொலைநகல்: 2781184.

3-68

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — (மாத்தளைக் கிளை ) மூலம் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ ( பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம்

### 1 ஆவது அட்டவணை

**மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், இலக்கம் E 357 B தவலன்கொலய கிராம அலுவலர் எல்லையில் உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை வடக்கு மெதசியபத்து உக்குவல கிராமத்தில் அமைந்துள்ள உக்குவல வத்த (பகுதி) காணிக்கு நிலஅளவையாளர் ஏ.ஜி.டபிள்யூ. கிரகம 2006.12.30 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 6331 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2**

**காணியின் விஸ்தீரணம் :**

**பதினாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16 பே.)**

**இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து**

### 2 ஆவது அட்டவணை

**மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், உக்குவெல மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச சபை பிரிவில் இலக்கம் E 355 உக்குவெல கிராம அலுவலர் எல்லையில் மாத்தளை தெற்கு உக்குவெல மெதசியபத்து உக்குவல கிராமத்தில் உள்ள உக்குவெல எஸ்டேட் காணியின் மாத்தளை நிலஅளவையாளர் ஏ.ஜி.டபிள்யூ. கிரகம 1991.09.07 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2329/2 இல் காண்பிக்கப்பட்டகாணி**

**காணியின் விஸ்தீரணம் :**

**பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10 பே.)**

**இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து**

### 3 ஆவது அட்டவணை

